முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வால்மீகி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.11.2018, சனிக்கிழமை

1. **சடாட்சர சொரூபனே அரங்கா**
**சகலருக்கும் ஞானமருள வந்த**
**சடாட்சரனே ஆறுமுக அரங்கா**
**சற்குருவாய் உன்னை ஏற்கும் மக்கள்**

2. மக்கள் வளம் பெறுவரெனக் கூறி
மண்ணுலகில் ஒளி சூட்சும நூலை
ஆக்கமுடன் **விளம்பி துலை திங்கள்**
**அறிவிக்க மூவையீர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 17ம் நாள் 03.11.2018, சனிக்கிழமை)**

3. வாரமதில் வால்மீகி யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா உலகம் படைக்க
சுப்பிரமணியர் அருளாக வந்தநல்

4. வந்தநல் ஞானியரின் கொள்கை
வழிமுறைகளை ஏற்று நன்கு
சிந்தைதனில் குருபக்தி கொண்டு
சேவை கலந்து மக்களெல்லாம் வர

5. வருகவே நற்கதி உருவாகும்
வளமான சூழல் அமையும்
பருவமழை தவறா பெய்திட
பாருலகில் தருமம் பெருக வேணும்

6. வேணும் பசிபிணி அகற்றும்
வேலவன் தயவு உலகினில் பரவ
ஞானபலத்தால் எல்லாம் மாறும்
ஞானிகள் ஆளுமை உருவாகும்

7. ஆகவே அன்னதான சேவை
அகிலம் மாற்றும் உயர் சேவை
வகைபட மக்கள் இணைந்துவர
வழிமொழிந்து செய்திட ஏற்றம்

8. ஏற்றம் சகல மாற்றமும் காணும்
ஏழாம் படை வீட்டு ஞானியரின்
ஆற்றல் அறிந்த மக்களெல்லாம்
அருள் ஞான உலகில் இடம் பெறுவர்

9. இடம் பெற கலிகாலத்தில் இனி
எதிர்மறை சக்திகள் பலம்
திடமில்லா குறைந்து ஒழிந்து
தெய்வீக ஞானநெறியே வளரும்

10. வளரும் மக்கள் வாழ்வாதாரம்
வளரும் ஞானிகளின் பலம்
மலரும் ஆறுமுகன் தயவு கொண்ட
மகான்கள் ஆட்சி ஞான ஆட்சி

11. ஆட்சி கனிய நேரும்
அரங்கன் தலைமை கூடிட
ஆட்சி ஞானபண்டிதன் நடத்தும்
அருள் ஞான ஆட்சியாக மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வால்மீகி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

சரவணபவ ஜோதி சொரூபனே சடாட்சர சொரூபனே அரங்கமகா தேசிகனே உலகின் எல்லா மக்களுக்கும் ஞானத்தினை தந்தருள அவதாரமாக வந்துதித்திட்ட சரவணபவனே முருகப்பெருமானே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உண்மை ஞான குருநாதனாகிய உம்மை சற்குருவாய் ஏற்றுக் கொள்கின்ற மக்களெல்லாம் சர்வவளத்தினை பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 17ம் நாள் 03.11.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வால்மீகி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வால்மீகிமுனிவர்.

குற்றமில்லாத உலகத்தினை படைத்திட வேண்டியே முருகப்பெருமானின் நல்லருளாக வந்துதித்த அரங்கமகா தேசிக ஞானயோகியரின் கொள்கைகளை வழிவகுத்து தந்திட்ட வாழ்க்கை நெறிமுறைகளை, உபதேசங்களை எல்லாம் பயபக்தி பணிவுடன் ஏற்றுக் கொண்டு சிந்தையில் வைத்து குருபக்தி மிகக் கொண்டுமே தொண்டுகளை உலக மக்களுக்கு தாராளமாய் செய்து வருகின்ற மக்களெல்லாம் உலகினில் தொடர்ந்து அரங்கனை பின்தொடர்ந்து நடந்து வர உலகினில் நற்கதி உருவாகும். அவர்களுக்கு வளமான சூழல் உருவாகும்.

நாட்டினில் பருவமழை தவறாமல் பெய்திட வேண்டுமாயின் நாட்டினில் மக்களெல்லாம் தானதருமங்களை அதிகமாக செய்திட வேண்டுமப்பா. பசிப்பிணி அகற்றும் அன்னதானப் பணி முருகப்பெருமானால் உலகிற்கு தரப்பட்ட தயவுக் கொள்கையான பசிப்பிணி அகற்றும் பணியினை மக்களெல்லாம் ஏற்று செய்திட வேண்டும்.

முருகப்பெருமானின் தயவு உலகினில் பரவபரவ அன்னதானம் பரவபரவ, உலகினில் தயவு பெருகும், தயவு பெருக பெருக ஞானம் பெருகும். உலகினில் பெருக்கிட்ட ஞானபலத்தினால் உலகின் துன்ப சூழ்நிலைகள் எல்லாம் மாறிவிடும். உலகினில் தயவே வடிவான ஞானிகளின் ஆட்சி ஞானஆட்சியாக உருவாகிடும்.

ஆதலினால் பிறர் பசிக்கு உணவளிக்கும் அற்புதமான தயவு செயலான அன்னதான சேவையானது உலகையே மாற்றும் வல்லமைமிக்க உயர்வான சேவையாகும்.

அத்தகைய அன்னதானப் பணிகளுக்கு மக்கள் வந்து இணைந்து அவர்களும் அன்னதான பணிகளை தர்மங்களை செய்து வரவர, உலகம் தயவு பெருகி பல முன்னேற்றங்களை காணும், சகலவிதமான மாற்றங்களையும் காணும்.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் ஆசான் முருகப்பெருமானின் அவதாரம் ஆவார். அரங்கனின் ஆற்றலை அறிந்து கொண்ட மக்களெல்லாம் அருள்ஞான உலகினில் இடம் பெற்று சிறப்படைவார்கள்.

மக்கள் ஞானஉலகினில் அதிகமாக இடம்பெற உலகினில் உள்ள எதிர்மறை சக்திகளின் பலமானது வலுவிழந்து போகும். பின் படிப்படியாக உலகினில் இருந்து ஒழிந்தே போகும், தீவிரவாதம் அழிந்து தெய்வீக ஞானநெறியே வளர்ந்து ஓங்கும்.

உலக மக்களின் வாழ்வாதாரம் உயரும், ஞானிகளின் பலம் வளர்ச்சியடையும், முருகப்பெருமானின் தயவு கொண்டதும் முருகப்பெருமானே நேரில் அவதரித்து வந்து செய்கின்றதான ஞானஆட்சி உலகினில் இனி மலரும். மலர்ந்துமே ஞான ஆட்சி முதிர்ச்சி பெற்று உலகம் முற்றிலும் பரவி கனிந்திட நேரும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமை சேர்ந்திட நடக்கவிருக்கும் ஆட்சி ஞானபண்டிதன் முருகப்பெருமானே முன்னின்று நடத்துகின்ற அருள் ஞான ஆட்சியாக மாறும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வால்மீகி முனிவர்.

–சுபம்–